1978 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) & (ஆ) உணவுக் கொள்கை மாற்றம் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 91 இளநிலை உதவியாளர்கள் (Special Revenue Inspectors), 57 கடைநிலை ஊழியர்கள், 33 சுமைத் தூக்குவோர் பதவி இழந்தனர். இவர்களில் பதவி இழந்த இளநிலை உதவியாளர்கள் அனைவரையும் பல்வேறு துறைகளில் உள்ள காலியிடங்களில் அமர்த்தி வருவாய் வாரியம் ஆணைகள் பிறப்பித்துள்ளது.

கடைநிலை ஊழியர்களில் 5-7-1978 தேதி வரை 30 பணியாளர்களுக்கு மாற்றுப் பணி மாவட்ட ஆட்சித் தலைவர் அளித்துள்ளார். அரசு ஆணைப்படி பணியிழந்த தற்காலிக அலுவலர்களின் பட்டியல் ஒன்று மாவட்ட ஆட்சித் தலைவரால் தயாரிக்கப் பட்டுள்ளது. அதன்படி பல்வேறு துறைகளில் காலியாகும் பதவிகளில் அந்தப் பட்டியலில் உள்ள பணியாளர்களை, வரிசைப்படி பணியிலமர்த்த மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார். இன்னும் மீதியுள்ள 27 கடைநிலை ஊழியர்களுள் (13 முறைப்படுத்தப்பட்ட பணியாளர், 14 தற்காலிக பணியாளர்கள்) பணியிடங்கள் காலியாகும்போதும் புதுப் பணியிடங்கள் அனுமதிக்கப்படும்போதும், பணியில் அமர்த்தப்படுவார்கள்.

33 சுமை தூக்குவோர் தற்காலிக ஊழியர்கள் ஆவார்கள். இவர்கள் வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலம் பணியில் அமர்த்தப் படவில்லை. மேலும் இவர்களில் ஐந்து பணியாளர்களைத் தவிர ஏனையோர், கல்வி மற்றும் வயது தகுதியில்லாதவர்கள், தகுதியுள்ள ஐந்து பேர்களும் வேலை வாய்ப்பு நிறுவனத்தில் பெயர் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

தமிழ்நாடு நுகர்பொருள் வழங்கு கழகத்தின் கீழ் உள்ள சோதனைக் கூடம்.

*வினா 64—திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா: —

(அ) தமிழ்நாடு நுகர் பொருள் வழங்கு கழகத்திற்காக Regional laboratory ஒன்று தஞ்சையில் இயங்கி வருகிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் நிர்வாகப் பொறுப்பு யாருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது?

(இ) நாளொன்றுக்கு சராசரி அப்பரிசோதனைக் கூடத்திற்கு எத்தனை samples வருகிறது?

[1978 செப்டம்பர் 7

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:

(அ) ஆம்.

(ஆ) நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மேலாளர் (தரக்கட்டுப்பாடு) (Manager Quality Control) அவர்களது நிர்வாகப் பொறுப்பில் உள்ளது.

(இ) 41 (நாற்பத்தொன்று).

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவரவர்களே, அந்த ஒரே ஒரு சோதனைக் கூடம் மட்டும் தஞ்சை மாவட்டம் முழுமைக்கும் போதுமானதா? ஆகவே அதனை விரிவு படுத்துகின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா? அல்லது அது போன்ற மற்றொரு சோதனைக் கூடத்தைக் கீழ்த் தஞ்சையில் உருவாக்குகின்ற திட்டம் அரசுக்கு உண்டா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு சோதனைக் கூடம் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் போதும் என்று இந்த அரசு இப்போதைக்குக் கருதுகிறது. இன்னும் அதிகமான சோதனைக் கூடங்கள் ஆரம்பிப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இப்போதைக்கு கட்டாயக் கொள்முதல் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாகவே அறிவார்கள். ஆகவே இப்போதைக்கு அது தேவையில்லை. வேறு எதுவும் ஆரம்பிப்பதற்குரிய ஆலோசனைகள் இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9.10]

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தமது பதிலில் நெல் கொள்முதல் இல்லை என்று கூறினார்கள்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: கொள்முதல் இல்லையென்று சொல்லவில்லை, கட்டாயக் கொள்முதல் இல்லை யென்றுதான் சொன்னேன்.

திரு. மு. அம்பிகாபதி: கட்டாயக் கொள்முதல் இல்லை என்று கூறுகிறார்கள். அரசாங்கமே தஞ்சை மாவட்டத்தில் குறுவை நெல் முழுவதையும் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்குமா? அப்படி எடுக்கிறபோது அதைப் பரிசோதிக்க ஒரு நிலையம் போதுமா என்பதைப் பற்றி விளக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

1978 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: பொதுவாக குறுவை நெல்லை கொள்முதல் செய்வது அரசாங்கத்தில் வழக்கம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நல்லமுறையில் அறிவார்கள். இந்தக் குறுவை அறுவடையின்போது அப்படிப்பட்ட கொள்முதல் வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றி அரசு ஆலோசித்து முடிவு எடுக்கும்.

சின்கோனு துறைப் பணியாளர் ஊதியம்

*வினு—65 திரு. கு. ரமணி: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீலகிரி மாவட்டத்தில் அரசு சின்கோனு துறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நடந்து முடிந்த சட்டப் பேரவை தேர்தல் அன்று (14-6-77) ஓட்டுப் போடப் போனதால் ஊதியம் அளிக்கப்படவில்லையா?

(ஆ) ஆம் எனில், ஊதியம் அளிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:

(அ) ஊதியம் அளிக்கப்பட்டது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. ரமணி: அந்தத் தேர்தல் முடிந்து, அந்தத் தேர்தலில் ஓட்டுப் போட்டு வந்ததற்குப் பிறகு அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஊதியம் அந்த மாதத்தில் கிடைக்கவில்லை. அந்த மாதம் அவர்கள் வாங்குகிற சம்பளத்தோடு இந்த நாள் ஊதியமும் கிடைத்திருக்க வேண்டும், ஆனல், அந்த மாதிரிக் கிடைக்கவில்லை. கொடுத்ததாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். கொடுத்திருந்தால் வரவேற்கத் தக்கது. அது எப்போது கொடுக்கப்பட்டது? அந்த ஊதியம் எவ்வளவு காலதாமதமாகக் கொடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர் எம் வீரப்பன்: 3-12-77 அன்று வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இது முக்கியமான நல்லதொரு எடுத்துக்காட்டு. தேர்தல் நடந்து ஓட்டுப் போடப் போனதற்கு அவர்களுக்குத் தண்டனை ஆறு மாத காலம் கழிந்த பிற்பாடு இது கொடுக்கப்பட்டிருப்பது. இது சரிதானு? ஆறு மாதங்கள் கழிந்த பிற்பாடு இந்த ஒரு நாள் சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரிகள் ஏன் இப்படித் தாமதப்படுத்தினர்கள்? இனிமேலாவது இப்படி நடக்காமல் இருப்பதற்காக அந்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்வார்களா?